உ

திருப்பாலைவனத் தல வரலாறு

T. N. உமாபதி தேசிகர்

எழுதியது



தருமகர்த்தர்கள் :

ஆசானுபூதூர்-சிவசங்கர முதலியார்

எலியம்பேடு-இராமசாமி முதலியார்

மெதூர்-எல்லீச முதலியார்

...பட்டது. விலை 2 அணா.

பதிப்புரை

இச்சிறு நூல் இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தார் சுற்றறிக்கையின் பயனாக ஆக்கப்பட்டது. அச் சுற்றறிக்கைக் காரணர் ஆயவர் உயர்திருவாளர்-ராவ்பகதூர்-திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B.A., B.L., F.R.C.S. அவர்களாவர். இத்தகைய நூல்கள் பல திருக்கோயில்களின் உண்மைப் பொருள்களைப்பற்றி அறிவதற்கு இன்றியமையாதன. இத்தலத்துக் கல்வெட்டுக்களைத் தெளிவுபடுத்தி முறையாக எழுதித் தந்த திருவாளர் - M. பாலசுப்பிரமணிய முதலியார், B.A., B.L., அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

திருப்பாலைவனம்
தேவஸ்தானம்,
26-6-1950.

T. N. உமாபதி தேசிகர்,
மானேஜர்.

உ.

திருப்பாலைவனத் தல வரலாறு

---o---

1. இட அமைப்பு

சான்றோர் மிக்கதெனச் சிறப்புடையதும், பன்னிரு திருமுறைகளில் ஒன்றாகிய பெரியபுராணத்தை அருளிச் செய்த சேக்கிழார் சுவாமிகள் அவதரித்ததுமான இத்தொண்டை நாட்டிலே உள்ள சிவ தலங்கள் பலவற்றுள் சிறந்த தொன்று இத்திருப்பாலைவனம். இத்தலம் செங்கற்பட்டு ஜில்லாவில் பொன்னேரி தாலூக்காவில் உள்ளது. சென்னையிலிருந்து நெல்லூர் செல்லும் தண்டு ரோட்டில் ஆரணி ஆற்றைக் கடந்ததும் பழவேற்காட்டிற்குக் கிழக்கு நோக்கிப் பிரியும் கற்சாலையில், 9-வது மைல், 4-வது பர்லாங்கிலும், மற்றும் மதராஸ் தென் மஹாராஷ்டிர இருப்புப் பாதையின் சென்னை கூடூர் மார்க்கத்திலுள்ள பொன்னேரி என்ற புகை வண்டி நிலையத்திலிருந்து பழவேற்காடு போகும் கற்சாலையில் 7 மைல் தூரத்திலும் உள்ளது இத்தலம். பொன்னேரியிலிருந்தும் இத்தலம் வரும் வரையிலும் சாலையானது எல்லாவித வண்டிகளுக்கும் போக்கு வரவிற்கு ஏற்றதாக இருக்கிறது. இவ்வூர் ஒரு சிறு கிராமம். இவ்வூரிலிருந்து கிழக்கே 4 மைல் தூரத்தில் சமுத்திரம் இருக்கின்றதால், சமசீதோஷ்ண ஸ்திதி என்றே சொல்லவேண்டும். இத்தலத்திற்கு வரும் யாத்திரீகர்கள் தங்குவதற்கும் மற்றும் பலர் கல்யாணம் முதலிய சுப சடங்குகள் செய்வதற்கும், இத்தேவாலயத்தின் மேற் பார்வையிலுள்ளதொரு பெரிய சத்திரம் இருக்கிறது. மேலும் பிரதிதினமும் மூன்று தேசாந்திரிகளுக்கென ஆலயத்தில் மத்தியானத்தில் அன்ன வசதியும் அளிக்கப்பட்டு வருகிறது.

2. கோயில்

கோயிலானது ஊரின் மேற்குப் பாகத்தில் கிழக்கு நோக்கி உள்ளது. ஐந்து நிலையுள்ள கோபுரமொன்றும் கோயிலின் முன்புள்ள பதினாறுகால் மண்டபமும் கோயிலின் வாயிலை அழகுபெறச் செய்கின்றன. கோயிலின் எதிர்ப்புறம் அமிர்த புஷ்கரணி என்கிற திருக்குளமும், அமிர்தத்திற்கு ஒப்பான நீருடன் செந்தாமரை செழிக்க அமைந்திருக்கின்றது. அமிர்த புஷ்கரணியை மூன்று பக்கத்திலும் சுற்றித் தழைத் தோங்கிய தென்னை மரங்கள்

கண்களைக் கவரும் வனப்புடையனவாய், களைத்தோர் மாட்டுக் கருணை உடையனவாய்க் காட்சியளிக்கின்றன. இக்குளத்திற்குக் கிழக்கே திருநந்தனவனமும் திகழ்கிறது. இக்கோயில் நீண்ட சதுரப் பரப்பினதாய்க்கீழ்மேல் மதில் நீளம் 506 அடி தென் வடல் மதில் நீளம் 550 அடி ஆக சதுர அடி 283360 உள்ளதாய் இருக்கிறது. சுவாமியையும் அம்பிகையையும் தனித்தனியே சுற்றிவரும் உட்பிராகாரமும், சேர்ந்தாற்போல் சுற்றிவரும் மற்றொரு வெளிப்பிராகாரமும் உள்ளன. இக்கோயிலின் சிலாசாஸனங்களில் மிகப் பழமையானது. கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டை உடையதாய் இருக்கிறது. ஆகவே இக்கோயில் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென ஊகிக்க வேண்டும். சுவாமியின்பெயர் ஸ்ரீபாலீசர் (ஸ்ரீஅமிர்தேஸ்வரர்); அம்பிகையின் பெயர் ஸ்ரீலோகாம்பாள். சுவாமி அமிர்தமயமானவர். ஆதலின் இப்பெயர் எய்தினமை காண்க. தலவிருட்சம் பாலை மரம்; தீர்த்தம் அமிர்த புஷ்கரணி, சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம் முதலியன.

3. சுற்றுக்கோயில் உட்கோயில் முதலியன.

ஒருசில ஸ்தலங்களில் இருப்பதுபோல் இக்கோயிலின் கெர்ப்பக்கிரகம் (கெஜப் பிரஷ்டம்) யானையின் பின் பக்கத்தை ஒக்கயிருக்கும் இனங்களைச் சார்ந்த ஒரு கற்றளி. மேலும் இத்தலத்திற்கு முன் கோபுர வாயிலானது இறைவரின் சந்நிதிக்கு நேரே இராமல், இறைவனுடையவும், இறைவியினுடையவும்சந்நிதானங்களுக்குப் பொதுவிலும், ஸ்ரீ ஷண்முக சுவாமி சந்நிதானத்திற்கு நேரேயும், இருப்பது குறிப்பிடத்தக்கது. சுவாமி கோயிலைச் சுற்றியிருக்கும் உட்பிராகாரத்தில் ஆஞ்சநேயர், நிருத்தன விநாயகர், சமயாச்சாரிய சுவாமிகள் நால்வர், காசிவிசுவநாதர், மார்க்கண்டேசுவரர், வீரபத்திரர், நாகங்கள், பிக்ஷாண்டவர், வள்ளிதெய்வயானையுடன் சுப்பிரமணியர், நவக்கிரகம், சண்டிகேசுவரர் முறையே தென்மேற்கு மூலையிலிருந்து வடகிழக்கு மூலை வரையில் ஸ்தாபிக்கப்பட்டுப் பூஜையிலிருந்து வருகின்றன.

தேவகோஷ்டத்தைச் சுற்றிலும் தென்பாகத்திலிருந்து வடபாகம்வரையில் வலமாக விநாயகர், தக்ஷிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா, மஹிஷாசுரமர்த்தினி முதலிய மூர்த்திகள் முறையே பூஜிக்கப்பட்டு வருகின்றனர்.

4. சிற்பச் சிறப்புக்கள்.

சுவாமி கோயிலின் மஹாமண்டபத்தினுள் நுழைந்ததும் எதிரே தெற்கு நோக்கியிருக்கும் ஸ்ரீ நடராஜர் சிவகாமசுந்தரி, மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய இவர்களின் திருவுருவங்கள் உயிர் ஓவியத்தை ஒக்கயிருக்கின்றன. மேலும் இத்தேவாலயத்தில் விநாயகர், சோமாஸ்கந்தர், பராசக்தி, சுப்ரமண்யர், அஸ்தராயர், சந்திரசேகரர், சமயாச்சாரிய சுவாமிகளாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஆக நால்வரும், பிரதோஷ நாயகர், சுக்ரவார அம்பிகை, பாலசுப்ரமண்யர், பள்ளியறை மீனாக்ஷி சமேத சொக்க நாதர், அன்னபூர்ணி, ஆலயம்மன் என்கிற கிராம தேவதை முதலிய உற்சவ விக்கிரகங்களும் இருக்கின்றன. கோயிலுக்குள் தென்மேற்கு மூலையில் ஸ்தல விருட்சமாகிய பாலைமரம் தழைத்து ஓங்கி தண்ணிழல் தந்து வருகிறது. கோயிலுகுள்ளிருக்கும் வெளிப்பிராகாரத்தில் தென்கிழக்கு மூலையில் சூரியபகவான் ஆலயமும், தென்மேற்கில் விநாயகர் சந்நிதியும், மேற்கில் அருணாஜலேசர் ஆலயமும், வடக்கில் சண்டிகேசுவரர் ஆலயமும், வடகிழக்கில் பைரவர் ஆலயமும், யாகசாலையும் அமைந்திருக்கின்றன.

இத்தேவாலயத்தின் மேற்பார்வையிலுள்ள முன்சொல்லப்பட்ட திருநந்தனவனத்திற்குள் அகமுத்தீசுவரர் என ஒரு சிறு சிவாலயமும் விநாயகர் சந்நிதியும் இருக்கின்றன. அவைகளுக்கு நாள்தோறும் காலையில் ஒரு வேளை பூஜையும் செய்யப்பட்டு வருகிறது.

இக்கோயிலுக்கென பங்குனி உத்திரப் பெருந்திருவிழாவிற்கு ஒரு தேர் இருக்கிறது. ரூ. 1000 பெருமானமுள்ள தேர்ச்சீலைகளும் எடுபிடிகளும் இருக்கின்றன. பெருச்சாளி வாகனம், சூரியப்பிரபை, பெரிய விமானம், இரண்டு இரஷபவாகனங்கள், ஒரு மயில்வாகனம், ஒரு நாகவாகனம் ஒரு யானைவாகனம் இருக்கின்றன. பல்லக்கும் சிறு உத்ஸவ தொட்டிகளும், கேடயங்களும் இருக்கின்றன. சுமார் 300 ரூபாய் மதிப்புள்ள திருவாபரணங்களும், ரூ. 200 மதிப்புள்ள பட்டுக்குடை வகையராக்களும், 200 ரூபாய் மதிப்புள்ள பாத்திரபண்டங்களும் இருக்கின்றன.

இவ்வூர் இறைவர் (தான் தோன்றி) சுயம்புமூர்த்தியாக பாலீசர் (பால்+ஈசர்) என்னும் பெயரிற்கு ஒப்ப, வெண்மை நிறத்துடன் விளங்குகிறார். இக்கோயிலிற்கு

ஸ்தலபுராணம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் கீழ் விவரிக்கப்பட்ட கர்ணபரம்பரைக்கதை ஒன்று வழங்கி வருகின்றது.

5. புராண வரலாறு.

முன்னொரு காலத்தில் தேவர்களும், அசுரர்களும் ஒன்று சேர்ந்து அமிர்தத்திற்காகத் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். அமிர்தம் கிடைத்தது. உடனே அசுரர் களை ஏமாற்றித் தாங்களே சாப்பிட நினைந்து சுரர்கள், அசுரர்களுக்குத் தெரியாமல் அமிர்தத்துடன் பூலோகத்தில் உள்ள இத்திருப்பாலைவனத்திற்கு வந்தார்கள். வந்து சிறிது அமிர்தத்தால் ஆண்டவனை அமைத்து, பூஜித்து விட்டு, பிறகு மிகுதி இருந்த அமிர்தத்தை எல்லா தேவர் களும் உண்டார்கள். இப்பொழுது அமிர்த புஷ்கரணி என்று வழங்கப்படுகிற திருக்குளத்தில் கைகளையும் கழுவினார்கள். இதைப் பிறகு அறிந்த அசுரர்கள் தவளைகளாக உருவங் கள் எடுத்து இக்குளத்தில் கரைந்திருக்கும் அமிர்தத்தை உண்ண முயற்சித்தார்கள். இதை உணர்ந்து தேவர்கள் இக்குளத்தில் தவளைகள் இருக்கக்கூடாது என சபிக்கவே அன்று முதல் இன்றுவரையில் இத்திருக்குளத்தில் தவளை களே இல்லாமலிருப்பது மேற் சொன்னவைகளுக்குச் சான்றாகிறது.

இவை நடந்து பல காலங்கள் ஆயின. வனங்கள் வளர்ந்தன. அமிர்தத்தினால் செய்யப்பட்டுத் தேவர்களால் பூஜிக்கப்பட்ட இறைவனார்மீதும் ஒரு மரம் வளர்ந்து பருத்து மூடிக்கொண்டது. அதுதான் இப்போது இருக்கும் பாலைமரத்தின் இனத்தைச் சேர்ந்தது.

பின்னொரு காலத்தில், வடக்கே சென்று ஜயத்துடன் திரும்பிய சோழ அரசர் ஒருவர், இவ்வழியே வர நேர்ந்து. தடாகத்துடன் கூடிய இவ்வனத்தில் தங்கி இளைப்பாறினர். அச்சமயம் ஒரு குறிப்பிட்ட மரத்திலே கட்டப்பட்ட யானை களும் குதிரைகளும் இறந்து படவே அதைக்கண்ட அச் சோழ அரசர் சினந்து அம்மரத்தை அடியோடு வெட்டி விட ஆக்ஞாபித்தார். ஆள்களும் ஆயுதங்களுடன் சென்ற னர்; மரத்தையும் வெட்டினர். அவ்வளவுதான், மரத்தின் அடிப்பாகத்தினின்றும் இரத்தம் குபீர் குபீர் என்று பீரிட்டு வந்தது. அதைக்கண்டு, பயந்து வியப்படைந்து ஆள்கள் அரசனிடம் ஓடோடியும் வந்து தெரிவித்தனர். உற்ற

இடத்திற்கு அரசன் ஓடிவந்தான் ; உண்மையை உணர்ந்தான்; ஆண்டவன் என்று அறிந்தான்; அலறினன், ஆட்கொண்டார் என்று உவந்து ஆலயம் ஒன்று அமைத்தான். அதுதான் இப்பொழுதும் இத்திருப்பாலைவனத்தில் இருக்கும் திருப்பாலீச்சரம். அன்று ஆட்களின் கோடாலியினுல் பட்ட அடி இன்றும் இறைவன் திருமேனியில் இருக்கக் காண்கிறோம்.

ஆண்டவன் அமிர்தத்தினுல் ஆக்கப்பட்டவர் ஆதலின் திருமேனியில் சந்தனம் சாத்தினுல் கரைகிறது. எனவே இப்பெருமானுக்குச் சந்தனம் வெள்ளி விபூதிப் பட்டத்தின் மேல்தான் சாத்தப்பட்டு வருகிறது. மேலும் இவ்வாண்டவர்க்குப் பால், பன்னீர், இளநீர், சுத்த ஜலம் தவிர வேறு எதுவும் அபிஷேகம் செய்கிறதில்லை. மற்றும் பின் ஒரு காலத்தில் வாசுகி என்னும் ஒரு சர்பம் தனக்கு ஏற்பட்ட ஒரு சாப விமோசனத்தின் பொருட்டு இத்தேவாலய இறைவனை சிலகாலம் வழிபட்டு வந்ததாகத் திருவொற்றியூர் ஸ்தல புராணத்தில் கூறப்பட்டுள்ள விஷயம் நோக்கற்பாலது.

இத்தலத்து இறைவனை முறையே வழிபடுகிறவர்கள் நன்மக்கட்பேறும், திடகாத்திரமும், தீர்க்காயுசும் அடைந்து வருகிறார்கள். அமிர்தத்தை இவ்விடத்தில் உண்டு சென்ற தேவர்களுக்கு ஒப்பாகவே மக்களும் நிர்ப்பயமாய் சுகமடைந்து வருகிறார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இவ்வாலயத்தில் பங்குனி உத்திரத்தில் பத்து நாள் சிறப்பாகப் பெருந் திருவிழா நடந்து வருகிறது. அவைகளில் முக்கியமாகக் கொடியேற்றம் பொன்னேரி காவணி மங்கலம் விற்பெற்ற நாட்டவர்களாலும், சூரிய சந்திர பிரபை உற்சவம் காட்டாவூர் - விநாயக முதலியார் அவர்களாலும், விமானக்காட்சி அரசூர் நாட்டு - நடேச முதலியார் அவர்களாலும், நாகவாகன உற்சவம் சீர்கருணீக மரபினர்களான மெதூர் - பட்டாபிராமப் பிள்ளை வகையராக்களாலும், யானை வாகன உற்சவம் பஞ்சேஷ்டி குப்புசாமி முதலியார் அவர்களாலும், தொட்டிப் பிரபை உற்சவம் அரசூர் - பார்த்தசாரதி முதலியார் அவர்களாலும், நெப்போற்சவத் திருமணக்காட்சி காட்(டு)ப்பள்ளி - மைனர் ஷண்முகசுந்தர முதலியார் அவர்களா(லு)ம் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் இத்தேவாலயத்தில் சித்திரா பௌர்ணமி உற்சவம் இவ்வூர் தாசி அங்கம்மாளாலும்' அன்னபிஷேகம் மெதூர் - எல்லீச முதலியார் அவர்களா

லும், கந்தர் சஷ்டி உற்சவம் தக்கமஞ்சி நாச்சியப்ப முதலியார் அவர்களாலும் திருக்கார்த்திகை உத்ஸவம் ஆசாநுபூதூர் - கிராம முதலிமார்களாலும், அரக்கட்டு உற்சவம் வஞ்சிவாக்கம் கிராம முதலிமார்களாலும் ஆருத்திரா தரிசனம் காஞ்சிவாயல் ஜமீன்தார் அவர்களாலும், தைப்பூசம் தெப்பல் மடுமை - எல்லப்ப முதலியார் அவர்கள் வகையரா முதலிமார்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன. சமயாசாரிய ஸ்வாமிகளின் திருநக்ஷத்திர உற்சவமாகிய சித்திரைச் சதயம் ஆசாநுபூதூர் - சுப்பராய முதலியார் அவர்களாலும், வைகாசிமூலம் ஏலியம்பேடு - இராமசாமி முதலியார் அவர்களாலும், ஆனி மகம் பெருவாயல் - முனிசாமி முதலியார் அவர்களாலும், ஆடி ஸ்வாதி அகரம் அய்யாசாமி குருக்கள் அவர்களாலும் முறையே நடத்தப்பட்டு வருகின்றன.

இத்தேவாலயத்துத் தருமகர்த்தர்கள் இனத்தைச் சார்ந்த (பையூர் கோட்டத்து வேளாளர்) முதலிமார்களால் தானம் செய்யப்பட்ட நிலங்களின் வருமானங்களிலிருந்து முக்கியமாக உச்சிகாலம் பஞ்ச பர்வங்கள், நவராத்திரி, வசந்தோற்ஸவம், நடராஜர் அபிஷேகங்கள், மாணிக்கவாசகர் திருவெம்பாவை உற்சவம் முதலியனவும் நித்தியத்தில் சில தீபங்களும் அவ்வப்போது கோயிலில் திருப்பணிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வூர் கு. ஜடசுந்தர முதலியார் அவர்களால் பிரதி கிருத்திகை உற்சவமும், மெதூர் இரத்தின செட்டியார் அவர்களால் பிரதி சனிப் பிரதோஷ உற்சவமும், நடந்து வருகின்றன.

6. சரித்திர வரலாறு-கல்வெட்டுகள்

இந்தக் கோயிலில் படி எடுக்கப்பட்ட 71 கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் காலத்தால் மிகவும் முற்பட்டவை. சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த பெரிய புராணத்தை அரங்கேற்றிய பேரம்பலம் பொன்மேய்ந்த இரண்டாம் குலோத்துங்க சோழனுடையன. (கி. பி. 1143 A. D.) இக்கல்வெட்டுகளால் பல நூற்றுண்டுகளுக்கு முற்பட்ட பழைய காலத்தில் இத்திருக்கோயிலில் நடந்த உற்சவ விவரங்கள் அப்போது இருந்த நந்தன வனங்களின் பெயர்கள், திருமடங்களின் பெயர்கள், திருக்கோயிலின் மண்டபங்கள், திருமதில்கள் முதலிய திருப்பணிகள் நிறைவேறிய விவரங்கள், பிறகு விக்கிரகங்கள் எழுந்தருளிவிக்கப் பட்ட விவரங்கள் காணப்படுகின்றன. இக்காலத்தில் ஜில்லா, தாலூக்கா பிர்க்கா, கிராமம் என்ற உட்பிரிவுகளைப் போல

அக்காலத்திலும் இருந்தன. இக்கோயில் கல் வெட்டுகளில் திருப்பாலைவனம் என்ற இத்தலம் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மெய்க்குன்ற வளநாட்டு பையூர் கோட்டத்துத் திருப்பாலைவனம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்தலத்துச் சுவாமியின் பெயர் திருப்பாலைவனமுடையார் என்றும் திருப்பாலைவனமுடைய நாயனர் என்றும் அம்பிகையின் பெயர் என்றும்பிரியாத நாச்சியார் என்றும், பெரிய நாச்சியார் என்றும் காணப்படுகின்றன.

இத்தலத்திலுள்ள நடராஜ திருஉருவத்தின் அடிப்பீடத்தில் கன்னட பாஷையில் ஒரு ஸாஸனம் காணப்படுகிறது. அதில் உதயகிரி மந்திரியான திம்மண்ணு என்பவரின் குமாரர் அவசரம்பிரம்மப்ப நாயகர் என்பவரால் சாலிவாகன சகம் 1362 (கி. பி. 1440. A. D.) ரௌத்திரி வருஷம் கார்த்திகை சுத்தம் திரயோதசிகூடிய ஞாயிற்றுக்கிழமையன்று தானம் செய்யப்பட்டதாகக் குறிக்கப்பட்டுள்ளது. சிலாசாஸன இலாகா அதிகாரிகள் நடராஜ உருவம் பழமையானதென்றும் அதற்கு அவ்வாண்டில் பீடம்மட்டும் தானம் செய்யப்பட்டதென்றும் கருதுகிறார்கள். சந்திரசேகரர் திருஉருவத்தின் பீடத்திலும் இவ்வாறே ஒரு தெலுங்கு சாஸனத்தில் மேற்படி சந்திரசேகர சுவாமியும் அம்மனும் சாலிவாகன சகம் 1681 (கி. பி. 1759 A. D.) பிரமாதி வருஷம் வைசாக சுத்தம் சப்தமி அன்று, கோலூர் வெங்கடராஜாவின் பேரனும், குமார வெங்கடராஜாவின் புதல்வருமான மேதினிமிசாரகண்ட கட்டாரி சாளுவ கல்யாண புரவரதீஸ்வர ரகுநாயகுலராஜு என்பவரால் தானம்செய்யப்பட்டதென குறிக்கப் பட்டுள்ளது. பிராகாரத்திலுள்ள ஆஞ்சநேயசிலையின் மேல் நொளம்பி ஆற்றுளான் நாயக நாராயணன் அன்னன் திக்கன் என்பவரால் அச்சிலை தானம் செய்யப்பட்டமை கூறப்படுகின்றது. திரிபுவன சக்ரவர்த்தி ராஜராஜ தேவனுடைய பதினெட்டாவது ஆட்சி ஆண்டில் காரைக்காலம்மையார் திருவுருவம் ஒன்று சோழமண்டலத்து அதங்கூர்வணிகர் ஒருவரால் நிருவப்பெற்றமை ஒரு கல்வெட்டினுல் காணப்படுகின்றது.

மார்கழி திருவாதிரையில் சிறப்பாக அபிஷேக உற்சவ முதலியன நடைபெறுவதற்கும் சித்திரையில் திருவிழா நடைபெறுவதற்கும் உத்திராயண மகர சங்கராந்தி புண்ய காலத்தில் சிறப்பான பூஜை நடைபெறுவதற்கும் தானம்

செய்யப்பட்ட விவரங்கள் சில கல்வெட்டுகளில் கிடைக்கின்றன.

ஆலாலசுந்தரன் திருநந்தனவனம் பத்நர்சித்நத்துறைவான் திருநந்தனவனம் ஐம்பத்தெழுவர் திருநந்தனவனம் என்ற மூன்று நந்தனவனங்களிலிருந்து புஷ்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட செய்திகள் மூன்று கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

தண்மடாவளவன் திருமடம், கண்ட கோபாலமாணிக்க மடம், அன்பர்க்கடியார் திருமடம் என்ற திருமடங்கள் இத்தலத்திலிருந்த செய்தியை மூன்று கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இத்திருக் கோயிலைக் கற்றளி திருப்பணியாக ஜெயங்கொண்ட சோழ கிடாரத்தரையன் என்ற சோதி வடுகன் ஏற்றுக்கொண்டு வடுகன் தேவன் என்பவனைக் கொண்டு பல கிராமங்களிலுள்ள சுதந்திர உரிமைகளைத் தானம் செய்து முடித்தானென்றும், அவ்வடுகன் தேவன் அவ்வாறு பெற்ற உரிமைகளில் மூன்றில் இருபங்கை தன்னுடைய இருமருகர்க்கும் சீதனமாகக்கொடுத்தான் என்றும் ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. சுந்தரபாண்டியன் திருமதில் என்ற இக்கோயில் மதில் ஒன்றைக் கட்டிவைக்க, பையூர்கோட்டத்துச் சபையினர் அளிநல்லூர் (அயநல்லூர்) கிராமத்தில் சில நிலங்களை தானம் செய்ததும், ஒபுல ராஜையா என்பவன் புதல்வன் பெத்த ராஜா என்பவன் மஹா மண்டபம் ஒன்றைக்கட்டி வைத்ததும், அண்ணு பிள்ளை நாயகர் ஒரு மண்டபத்தையும் படிகளையும் கட்டியதையும், திக்கம நாயகருடைய காரியஸ்தர் அம்மன் கோயில் திருப்பணி செய்ததையும் சில கல்வெட்டுக்களால் அரிய வருகின்றன.

மதுராந்தக பொத்நபிச் சோழன் கண்ட கோபாலன் சந்தனம் தருவதற்காகத் 'திருச்சாந்துப் பட்டி' யாக நிலங்கள் விட்ட செய்தியும் உச்சிகால பூஜைக்காக நாட்டிலும் தேசத்திலுள்ளோரும் கைக்கோளரும் சாலிவாகன சகம் 1601-ல் ஏற்பாடு செய்தமையும் இக்கோயில் கல்வெட்டுக்களால் தெரிய வருகின்றன. சாலிவாகன சகம் 1129-ல் தம்முசித்தி என்ற தெலுங்கு சோழன் திருப்பாலைவனத்தில் தனக்குரிய வரி இறைகளை எல்லாம் இக்கோயிலுக்குத் தானமாகக் கொடுத்த செய்தியை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. அவ்வாறே விஜயகண்ட கோபாலன் என்ற மதுராந்தக பொத்நபிச் சோழன் சிற்பசுங்க முதலிய வரிகளை தானமாகக் கொடுத்ததும், பங்குனி உத்திர திருவிழாவில்

நகரத்தாரும் பரதேசிகளும் ஆகிய வியாபாரிகள் சபைகூடி சில பண்டங்களின் மேல் மகன்மை விதித்து, அதைக் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்ததும் சில கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கின்றன.

அன்பர்க்கடியார் திருமடத்திலுள்ள ஆண்டார்கள் திருக்கோட்டி மண்டப மேற்பார்வைசெய்து திருமுறை ஓதி பத்தர் சித்தத்துறைவான் திருநந்தனவனத்தின் திருப்பணி செய்து வந்ததை முன்னிட்டு அவர்களுக்கு மெதுக்கூரில் (மெதூர்) நிலம் தானம் செய்யப்பட்ட விஷயம் ஒரு கல்வெட்டாலறிகிரேும்.

மேலும் இத்தேவாலயத்திற்கு, இத்தலத்திலும், அருகிலும் சற்றுத் தூரத்திலும் உள்ள திருப்பாலைவனம், அரசூர், பனங்குடி, குன்றத்தூர், திருவான்மியூர், கோளூர், இறையூர், வாயலூர், ஞாயிறு, அதுங்கூர், குலோத்துங்க சோழன் பையூர், மெதூர், நடுவில்மலை, ஆவூர், மேல் முதலம்பேடு, புதுவாயல், காஷ்மீரபுரம், திருப்பாச்சூர், சேத்துறை, ஆமூர், பெரும்பேடு, ஆரணி, பெருங்கரும்பூர், ஈஞ்சூர், ஆலத்தூர், நாறையூர், முதலிய கிராமங்களில் கிராம வாசிகளாலும், சபையினர்களாலும், வெளியார்களாலும் மற்றும், இராணி நுங்கமதேவியார், ஒரு வாணியர், ஒரு தேவதாசி, ஒரு வியாபாரி, பெரியாழ்வான், வானவன் விழுப்பராயன், கண்டகோபால தேவன் முதலியவர்களாலும் சுவாமி அம்மன் சந்நிதானங்களில் தீபங்களுக்காக, தங்கம் முதலிய பொருள்களும், நிலங்களும், பசுக்களும், எருமைகளும், ஆடுகளும் தானம் செய்யப்பட்ட விஷயம் பல கல்வெட்டுகளால் அறியக்கிடக்கின்றன.

7. வரவு செலவு

இக்கோயிலுக்குச் சொந்தமாகத் திருப்பாலைவனம், ஒன்பாக்கம் என்னும் இரண்டு சுரோத்திரியக் கிராமங்களில் ரொக்க கிஸ்தி வருமானம் உடையனவாயும், ஷை கிராமங்களில் (Combatham lands) தேவஸ்தான ஸ்வாதீனத்தில் இருந்து வருகிற முதல் நெம்பர் பட்டா ஸ்ரீ பாலீசுவர சுவாமி பேரில் தாக்கலாய் இருக்கும் அயன் நஞ்செய் புஞ்செய் காணி 63-8-6, இனம் நஞ்செய் புஞ்செய் 9-2-4, நத்தக் கொல்லை காணி 7-3-14 இருந்து வருகின்றன. ஆவூர் என்னும் கிராமத்தில் 1 ஏகர் அயன் நஞ்செயும், பிரளயம்பாக்கம் என்னும் கிராமத்தில் 1 ஏக்கர் 14 சென்ட்

இனும் நஞ்செயும், சேகண்யம் என்னும் கிராமத்தில் இவ்வாலயத்துத் திருநாவுக்கரசு சுவாமிகளின் பெயரால் பட்டாவாய், 9 ஏக்கர் 99 செண்ட் அயன் நஞ்செய் புஞ்செய் நத்தம் இருக்கின்றன. ஆக ஆண்டு ஒன்றிற்குச் சுரோத்திரியக் கிராமங்கள், சொந்த நிலங்கள், சர்க்கார் மேரை, உபயங்கள் முதலியவைகளின் மூலம் மொத்த வருமானம் ரூபா 6500/- மொத்தச் செலவு ரூபா 6400/- மேலும் இத்தேவாலயத்துத் தருமகர்த்தர்கள் இனத்தவர்களான முன் சொல்லப்பட்ட முதலிமார்களால் இவ்வாலயத்திற்கென மொத்தம் 40 கிராமங்களில் 105 ஏக்கர், 5½ செண்ட் அயன் நஞ்செயும், ஜமீன் கிராமங்களில் காணி 20-13-11 நஞ்செயும் தானமாக விடப்பட்டும், நிலக்கட்டு வரி என்கிற வரி வசூலிக்கப்பட்டும் வருகின்றன. அதாவது ஷ இனத்து ஆண்களில் கல்யாணமானவர் 8 அணுவும், கல்யாணமாகாதவர் 2 அணுவும் ஆண்டு ஒன்றுக்குக் கொடுக்கக் கடமைப் பட்டவர்கள். இவை இத்தேவஸ்தானத்தைச் சார்ந்த "பூஸ்திதி கைங்கரிய பண்டு" என்னும் பெயரில், ஒரு குறிப்பிட்ட தனிக்கட்டளையாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இக்கட்டளையின் மொத்த வரவு ஆண்டு ஒன்றுக்கு ரூபா. 5500/- செலவு ரூபா. 5400/- இவ்வாலயத்தில் காலை, உச்சி, மாலை ஆகிய மூன்று காலங்களில் பூஜைகள் நடத்தப் பட்டு வருகின்றன.

8. நிர்வாகம்

இவ்வாலயத்துத் தருமகர்த்தர்கள் மூவரும் முன்னர் சொல்லப்பட்ட பையூர்க் கோட்ட வேளாள முதலிமார்கள். இப்பொழுது ஆசானுபூதூர்-சிவசங்கர முதலியார், ஏலியம் பேடு இராமசாமி முதலியார் மெதூர் எல்லிச முதலியார் என மூன்று தருமகர்த்தர்கள் இருக்கின்றனர். சென்னை ஹிந்துமத தர்ம பரிபாலன மன்றத்தவர்களால் நியமிக்கப் பட்ட தேவஸ்தான மானேஜர் ஒருவரும் இருந்து வருகிறார். இவ்வாலய நிர்வாக முறைகள் ஷ மன்றத்தார்களால் 1947 ஆம் ஜனவரி மீ 16 உ உத்திரவு எண் நெ. 146ன் படி திருத்தி வகுக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றன.

9. இலக்கியம்

இவ்வூர் வாசியான காலஞ்சென்ற ஸ்ரீ வடிவேலு முதலியார் அவர்களால் இக்கோயிலின் கண் எழுந்தருளி

இருக்கும் விநாயகப் பெருமான்மீது 10 தோத்திரப்பாடல்களும் சுப்பிரமணிய ஸ்வாமிமீது 108 பாடல்கள் கொண்ட ஒரு பாமாலையும் செய்யப் பட்டிருக்கின்றன. திருவாளர் சிவராஜஸ்வாமி அவர்கள் பாடிய அம்மையப்பன் புகழ் மாலையில் இறைவனார்மீதும், இறைவியின் மீதும் இரண்டு பதிகங்கள் பாடப்பெற்றிருக்கின்றன. தேவாலய தருமகர்த்தர்கள் இனத்தவர்களால் இவ்விறைவனார்க்கு நிலங்கள் தானம் செய்யப்பட்ட வகையில் "பூஸ்திதி கைங்கரியப் பண்டு" என்னும் பெயரால் சில விபரமான வெளியீடுகள் இருக்கின்றன.

10. பாடல்கள்

"எவ்வெவர் தன்மையுந் தன்வயப் படுத்துத்
தானே யாகிய தயாபரன் எம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியும்"
—திருவாசகம்

விநாயகர் பதிகம்.

கணபதி கிருபாநிதி சுரர்துதி செய்கெஜபதி
கமலாசனர்க் கருள்பதி
கசிபப் பிரஜாபதி கதிரவன் முதலினோர்
கருத்தி லுறைகனக மதியே
பணிமணி யார்த்த பரமேசரருள் பன்மணி
பாவலர்கள் பணியுமணியே
பலகாலு மன்பர்கள் பாசாங் குசாவெனப்
பாடிடும் பத்ம மணியே
மணமாலை மார்பினி லிலங்கவரு வேலர்தம்
மனதுக் கிசைந்த மணியே
மாங்கனிக் காயரன் தனைவலம்வரு மணியே
வளர் விநாயக மூர்த்தியே
சுணங்கார்ந்த யுட்கொங்கை யுமையுதவு பாலனே
தூம கேதாய நமவே
சுயசரித கெஜவத்ர சுகுண ரஞ்சலிமித்ர
சுருதி போற்றா புத்ரனே.

பாமாலை

திருமகள் மருமகள் பணிபுரிய நடுவிலகு
தேவி யோகாம் பிகையுடன்
திவ்ய சுபமங்கள கிருபாகர மூர்த்தியாய்
திகழும் அமுதீசர் நாப்பண்
திருப்பாலை வனமியற்றிய தவத்தா லொளிர்
தேசுறுஞ் சுப்ர மண்யா
சிறந்த பையூர் கோட்ட வேளாளரறமும்
செறிந்த செங்குந்தர் பணியும்
விருப்ப முடனேற்றுயிர்கள் வினையினுக் கேற்பவருள்
வேதாந்த விமல மூர்த்தி
விளித சித்தாந்த நாற்றுணிபெலா முனையன்றி
வேறு முளதோ விசாகா
தருநிழற் காவலன் கைதொழுந் தாணுவே
சகலாகமத்து நிறைவே
சங்கரப் பிரியசில சாம்பவி மகிழ்பால
சத்ருஜெய வடி வேலனே.

அமரர் சுரர்கூடி அமுதங் கடைந்தநா
ளரிசெய்த வஞ்சனை களால்
அவுணர்கள் துரத்திவர அபயமென விண்ணோ
ராற்ற வாகாய வாணி
சமரச நெறிகொண்டு அரனைபூசியு மெனச்
சாற்றிய துணர்ந்து தங்கள்
சந்தோஷ மறவமுத லிங்கபூசனை செய்து
தலைவனே காத்தருளெனத்
தமரமிகு தானவர்கள் ஓடிடத் தானுண்ட
சர்ப்பவிட வெப்ப நீங்கச்
சத்தி யோகாம்பிகை தவமியற்றலு முயர்
தலமிதன் றிலையொப்பெனத்
தமதெண்ண முறவமரர் திருப்பாலையமுதீசர்
தருமெமது குலமுதல் வனே
சங்கரப் பிரியசீல சாம்பவி மகிழ்பால
சத்ருஜெய வடி வேலனே.

ஸ்ரீ பாலீச்சுரர் பதிகம்

விண்ணவர்க ளமுதருந்த விருப்புளத்திற் கொண்டு
வெற்பையொரு மத்தாக்கி விடவரவை நாணாய்
பண்ணவர்கள் வாற்புறத்தும் பணமுடியின் பக்கம்
பற்றிவெகு தானவர்கள் பாற்கடலைக் கடைந்தே
வெண்ணெய்திரள் வதற்குமுனம் விடமெழக்கண் டோடும்
விண்டுவயன் றேவர்கட்காய் விடமருந்தி யவர்க்குத்
தின்னியநல் லமுதளித்துத் திருப்பாலை வனம்வாழ்
தெள்ளமுதாம் பாலீசா திருவருட்செய் தருளே.

அற்புதமா ரமுதமதை யமரருக்கன் றளித்தே
யவர்பருகும் போதவுண ரையமுளத் துதிக்க
யுற்பவ ஞ்சேர் மண்டுக வுருதரித்தின் னமுதை
யுண்ணுவரென் றவ்வுருவே யுற்பவிக்கா தாக்கிப்
புற்புதஞ்சேர் நற்குளத்தோர் புன்றவளை யேனும்
பொருந்தாமற் செய்தவுன்றன் புகழையெவ்வா றுரைப்
சிற்பரனே தேவர்புகழ் திருப்பாலை வனம்வாழ் [பேன்
தெள்ளமுதாம் பாலீசா திருவருட்செய் தருளே.

பாலைமரப் பொழிலினிறையுன் பதியடைந்த சோழன்
பகாரிய சேனையிலோ ரானைதரு பிணைத்த
காலையதின் கருவிகளிற் கனவுதிரம் பெருகி
கணப்போதி லுயிர்விலங்கக் கண்டவனும் பயந்தே
சோலையிலம் மரத்தடியை சோதனைசெய் துனது
சுயம்புருவை கண்டுமன்னன் துய்யசெம் பொன்
சிலமுடன் செய்துதொழும் திருப்பாலை வனம்வாழ்[கோயில்
தெள்ளமுதாம் பாலீசா திருவருட்செய் தருளே.

பீடுடைய மன்னவனுன் பெருமையறிந் தமைத்த
பெருங்கோயி லினிதமர்ந்து பெம்மாநின் றருளல்
மாடுமனை மக்களொடிவ் வாழ்வுசத மென்றே
வர்ஞ்சைகொளு மாக்கள்பெரு வாழ்வடைய வன்றே
நீடுபுகழ் பெற்றிலகும் நின்மலர்த்தா ளிணைக்கீழ்
நித்தியமும் வாழ்வதற்கே நின்பால்வந் தடைந்தேன்
தேடுமடி யார்க்கருள திருப்பாலை வனம்வாழ்
தெள்ளமுதாம் பாலீசா திருவருட்செய் தருளே.

ஸ்ரீ லோகாம்பாள் பதிகம்

சீர்பெறுவ ரேர்பெறுவர் திருநிலவு மூர்பெறுவர்
திசைக ளெல்லாம் போற்றிடுந்
திண்மைமிகு நிருபரிவ ரென்றுலகர்க் கூறநற்
றிருவோங்கு மகவு பெறுவர்
பேர்பெறுவ ரைம்பூதம் பிறழ்வுற்ற காலத்தும்
பீடுமா ரூது பெறுவர்
பிரமாதி தேவரும் யாவரும் பெறவறிய
பேரின்ப மும்பெறுகுவர்
நார்பெறுவ ரெந்நாளு நமன்றுயர மணுகாத
நன்ஞான முத்தி பெறுவர்
நான்மறையி னந்தமார் வானொளிரும் பொருளாகு
நாயகியுன் னருட் பெறுவரேல்
நேர்பெருகி நாளுளுந் திருவிழாப் பெருகிவளர்
திருப்பாலை வன மேவியே
சிலவடி யார்க்கருள்செய் பாலீசர் பாலமருந்
திரிலோ காம்பா ளன்னையே.

எக்காலு மம்மைநீ வாழிநின் னருள்வாழி
யெந்தைபா லீசன் வாழி
இபமுகன் வாழிநம் மிளையகும ரன்வாழி
யெதிரோங்கு நந்தி வாழி
தொக்காடி நின்கோயில் சூழ்ந்தமூர்த் திகள்வாழி
சோதிநின் கோயில் வாழி
தொன்மையாய்த் தோன்றியே யிதுகாறு மிளிர்கின்ற
தூயநின் பொய்கை வாழி
முக்காலு மர்ச்சித்து மூதறிவு பெற்றுவரும்
முதற்சைவ மரபும் வாழி
முக்தியை விரும்பிநின் திருப்பணி முடித்துவரு
முந்தவடி யார்கள் வாழி
திக்கெலாம் புகழ்மேவு திருப்பாலை வனம்வாழி
தெரிசிக்கு மடியர் வாழி
சிலவடியார்க் கருள்செய் பாலீசர் பாலமருந்
திரிலோ காம்பாள் வாழியே.

GOODLAND & CO., PRINTERS, MADRAS 1